முருகப்பெருமான் துணை

**மகான் கழற்சிங்க நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.05.2024,** திங்கட்கிழமை

1. அவதார ஞானியே அரங்கா
அறமாக வாழுகின்ற தேசிகா
புவனத்தில் தரும பலம் தந்து
புண்ணிய பூமியாக்கி காத்திட
2. காத்திட வந்த கந்தப் பெருமானின்
கருணை வடிவான அரங்கா
உத்தமமாய் உன் பெருமை கூறி
உரைத்திடுவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை குரோதி தகர்திங்கள்
அய்யாறு திகதி சோமவாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 30 ம் நாள், 13.05.2024, திங்கட்கிழமை)
ஆசிதனை கழற்சிங்க நாயனாரும்
அருளுவேன் உலக நலம்பெற
4. நலம் தரும் அரங்கன் திருவடி
ஞானத்திருவடியாக இருக்க
வலம் வந்து கலிவாழ் மக்கள்
வணங்கினாலே மாற்றம் உண்டு
5. உண்டான அரங்கன் வழி
உயர் பூசை கலந்தாலே போதும்
கொண்டதொரு பிறவி வழி
கோளாறு கரும வினை தாக்கம்
6. தாக்கம் யாவுமே வென்று
தன்னாய்வில் குருவருளால்
தேக்கமின்றி அறிவு ஞான
தெளிவு கிட்டி சிறந்திடுவர்
7. சிறந்த வழி குருவருளால்
சித்தி வழி எதுவென்றுமே
அருந்தவசி அரங்கன் மூலம்
அடைந்துமே கலியினில் தேறுவர்

8. தேறவே ஞானிகள் பூசை
தெய்வ நெறி தருகின்ற பூசை
ஆறுமுகனார் வழிபாடாக
அரங்கன் சரவணசோதி ஏற்றி

9. ஏற்றியே அருள்பலம் தர
இதன்வழி ஒளிஞானம் பெற
பற்றுவைத்து ஞானிகள் மேல்
பாடிடுவேன் நாம செபமாக

10. ஆகவே நித்ய பூசையாக்கி
ஆறுமுகனார் சடாட்சரத்தை
மகாமந்திரமாக செபித்துவர
மாதரும வழிமுறை தரும அரங்கன்

11. அரங்கன் அன்னதான சேவைதனில்
அனுகி தருமம் வளர்த்திட
வரங்கள் கூடி வருபவர்க்கு
வாய்ப்புக்கிட்டும் ஞானிகளாகவே ஆகிட

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–